வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 161/2022

வழக்கு சாட்சி LW5/PW4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வீரா | ஜாதி | |
| கணவர்/தந்தை | வரதன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 52 |

தேதி 05.11.2025

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மாத்தூரில் வசித்து வருகிறேன். தற்போது என்னிடம் பார்வை மகஜரில் காட்டப்படும் கையொப்பம் என்னுடையது தான். மேற்படி கையொப்பம் அ.த.சா.ஆ.3 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணைச் செய்தார்கள். 26.11.2022 அன்று பெருமாள் கோவில் எதிரில் சம்பவ இடமான கோவிலில் காலை 9.00 மணியளவில் போலீசார் பார்வையிட்ட போது நானும் பார்த்திபனும் சாட்சிக் கையொப்பம் செய்தோம். வரைபடம் வரைந்தார்கள். போலீசார் என்னை விசாரணைச் செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

என்னிடம் காட்டப்படும் சார்வு செய்யப்பட்ட சம்மனில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். பார்வை மகஜரில் உள்ள கையொப்பமும் சார்வு செய்யப்பட்ட சம்மனில் உள்ள கையொப்பமும் வேறுவேறு என்றால் ஆமாம். கோவில் நிர்வாகி யார் என்றால் சாட்சிப் பட்டியலில் உள்ள ஏழுமலை, தாமரைச்செல்வன், பார்த்திபன், லோகுதாஸ் நான். திருடுப்போனது எப்போது தெரியும் என்றால் மறுநாள். காவல் நிலையம் யார் யார் சென்றோம் என்றால் நான் போகவில்லை. நான் கோவில் நிர்வாகி என்பதால் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்தது தெரிந்துவிடும் என்பதாலும் மறுக்கிறேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு சம்பவ இடத்தில் கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**